# உ.வே.சா.வின் சங்க இலக்கிய உரைகளின் வழியாக அறியலாகும் உரிச்சொல்

# An Adjective known through the Sangam Literature Commentaries of U. V. Saminathaiyar

*முனைவர் கி. சங்கர நாராயணன்*
உதவிப் பேராசிரியர், துறைத்தலைவர் (பொ.)
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை, இந்தியா

**Dr. K. Sankara Narayanan**
*Assistant Professor & Head (i/c),*
*Department of Sangappalagai for Tamil Development, University of Madras*
*Chennai, India*

**Citation**: Sankara Narayanan, K. "An Adjective known through the Sangam Literature Commentaries of U.V. Saminathaiyar." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 35-40.

BY SA

*https://doi.org/10.5281/zenodo.20053752*

*ஆய்வுச் சுருக்கம்*
*இலக்கண அடிப்படையில் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்று நான்காகப் பாகுபடுத்துவர். இவற்றுள் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் தனித்து இயங்கும் ஆற்றலுடைய உருபன்கள். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தனித்து இயங்கும் ஆற்றலற்ற உருபன்கள் என்பர். இடைச்சொல்லும் உரிச்சொல்லுயும் பெயரையும் வினையையும் சார்ந்து இயங்கும் உருபன்கள் எனத் தொல்காப்பியர் சுட்டுவர். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தனித்து இயங்கும் தன்மையற்ற உரிச்சொற்களாக இல்லாவிடினும், பெயரையும் வினையையும் சார்ந்து வரும்போது சில இடங்களில் அதன் பொதுப் பொருண்மையினையே மாற்றும் அளவிலான உருபன்களாக இவற்றைக் கருதலாம். தொல்காப்பியம் முதலான சங்க இலக்கியங்களுக்கு உரைகண்ட உரைகாரர்கள் வழியாக நம்மால் குறிக்கத்தகுந்த சில இலக்கணக் கூறுகளை அடையாளம் காண முடிகிறது. மேலும், உரைகளின் வழியாகத் தான் சில சொற்களின் இலக்கணக் கூறுகளையும் நம்மால் அறிய முடிகின்றது. அவ்வகையில் சங்க இலக்கியத்திற்கு உரைவளம் கண்ட உ.வே.சாமிநாதைய்யரின் குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறநானூற்று உரைகளில் காணலாகும் உரிச்சொற்களின் வருகை முறையினையும் அவற்றின் பொருட்புலப்பாட்டு முறையினையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.*
***முக்கியச்சொற்கள்:*** *உ.வே.சாமிநாதைய்யர், உரையாசிரியர்கள், இலக்கணக் கூறுகள், உரிச்சொல், குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு, உரைகள்*

**Abstract**
*Grammatically, words are divided into four categories namely noun, verb, interjection and adjective. Among these, the noun and the verb are independent active morpheme. Interjections and adjectives do not function separately.. Tolkappiyar writes as morpheme which depend on the interjection, adjective, noun and verb. Although interjections and adjectives are not stand-alone adjectives, they can be considered as adjectives that change the general meaning of nouns and verbs in some places. We can identify some significant grammatical elements through the narrators of Sangam literature such as Tolkappiyam. Also, we can learn the grammatical elements of some words only through commentaries. In this way, this article highlights the arrival of adjectives found in the of Commentator U. V. Saminathaiyar's Kurunthogai, Iynkurunooru and Purananooru commentaries, and their method of finding meaning.*
***Keywords:*** *U.V.Saminathaiyar, Commentator, Grammatical Aspects, Adjective, Kurunthogai, Iynkurunooru, Purananooru*

**ஆய்வுக் கட்டுரை**

*உரிச்சொல்லானது அதனுடைய இயல்பினை விரிக்குமிடத்து இசையின்கண்ணும் குறிப்புப் பொருளின் கண்ணும் பண்பின்கண்ணும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றும். பெயர்போலவும் வினைபோலவும் அமைந்து, அவ்விரு சொல்லாதற்கும் உரியதாய்த் தன் வடிவம் தடுமாறும். ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்பதேயன்றி, ஒருசொல் பலபொருளுக்கு உரிமை உடையதாகவும் பலசொல் ஒருபொருளுக்கு உரிமை உடையதாகவும் வரும். வழக்குப் பயிற்சி மிகுதியாக இல்லாதவற்றை, வழக்குப்பயிற்சி மிக்கவற்றுடன் வைத்து அவற்றின் இயல்பையும் பொருளையும் உய்த்துணர வேண்டும். அச்சொற்கள், தத்தமது இயல்புபடி, தாம் சென்று இயைந்து நிற்கும் பெயரும் வினையுமாகிய நிலைக்களன்களால் பொருள்வேறுபடும். இவ்வாறு உரிச்சொல் எதுவாயினும், இடமறிந்து பொருளை அறிந்து கூறவேண்டும் எனத் தொல்காப்பியர் பின்வரும் நூற்பா வழியாக விளக்குகிறார்.*

***உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை***
***இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்***
***பெயரினும் வினையினும் மெய்தடு மாறி***
***ஒருசொற் பலபொருட்கு உரிமை தோன்றினும்***
***பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்***
***பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்***
***தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்***
***எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல் (தொல்.சொல்.782)***

*உரிச்சொற்களை இரண்டு வகையாகப் பிரிப்பர். ஒருபொருள் உணர்த்துவன, பலபொருள் உணர்த்துவன. தொல்காப்பியத்தை அடுத்து, வீரசோழியம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், தமிழ்நூல், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் ஆகிய இலக்கண நூற்களும் உரிச்சொல்லின் இலக்கணத்தைச் சிற்சில மாற்றங்களுடனும் வளர்ச்சிகளுடனும் பதிவு செய்கின்றன. நிகண்டுகளும் அகராதிகளும் உரிச்சொற்களின் பொருள்புலப்பாட்டுக்குப் பெரிதும் துணை புரிகின்றன.*

*இனி, உ.வே.சா.வின் குறுந்தொகையின் உரையில் காணப்படும் உரிச்சொற்களின் வருகை முறையினைக் காணலாம்.*

***"நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்து" (குறுந்: 6-1)***
***நள்: நளியென்னும் உரிச்சொல் ஈறு திரிபு***
***"நனந்தலை யுலகமுந் துஞ்சும்" (குறுந்: 6-3)***

*அகன்ற இடத்தையுடைய இவ்வுலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் வருத்தமின்றி உறங்குகின்றன. இத்தொடரில் நனந்தலை: நன: அகரத்தை உணர்த்தும் அகரவீற்று உரிச்சொல் வந்துள்ளது.*

***"வம்ப மாரியைக் காரென மதித்தே" (குறுந்: 6-5)***
***வம்பு என்னும் உரிச்சொல் நிலையின்மைப் பொருள் குறித்து வந்தது***
***"வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யர்வையை" (குறுந்:14-2)***

*வார்தலென்னும் உரிச்சொல் நேர்தலென்னும் பொருளில் வந்து நேராக விளங்குகின்ற கூர்மையாகிய பற்களையும் சிலவாகிய சொற்களையுமுடைய தலைவி*

***"நோக்கி நோக்கி வாளிழந் தனவே" (குறுந்:44-2)***

*எதிரில் வருபவர்களைப் பார்த்துப் பார்த்து என் கண்கள் ஒளி இழந்தன. இத்தொடரில் வாளென்னும் உரிச்சொல் ஒளியாகிய பண்பு உணர்த்தி நின்றது.*

***"கரும்புன றொகுத்த நடுங்கரு ரள்ளற்"*** ***(குறுந்: 103-1)***

*கடியென்னும் உரிச்சொல் மிகுதிப்பொருளில் வந்தது. ஈறு திரிந்து வந்தது*

***"கடியுண் கடவுட் கிட்ட செழுங்கல்"*** ***(குறுந்:105-2)***

*சிறு தினையில் வளமான கதிரை புதியதை தேடி உண்ணும் தெய்வத்துக்கு பலியாக இட்டனர். இத்தொடரில் கடியென்னும் உரிச்சொல் புதுமையென்னும் பொருளில் வந்தது.*

***"கறவை கன்றுவயிற் படரப் புறவில்"*** ***(குறுந்:108-2)***

*படரென்னும் உரிச்சொல் செலவாகிய குறிப்புணர்த்தியது*

***"கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்"*** ***(குறுந்:117-4)***

*கதழ்வு என்னும் உரிச்சொல் விரைவுப் பொருளில் வந்தது*

***"கடுத்தலுந் தணிதலு மின்றே"*** ***(குறுந்:136-3)***

*நுண்ணியதாகக் குறைதலும் பின்னர் மிகுவதும் இன்று. இத்தொடரில் கருத்தல்: கடியென்னும் உரிச்சொல் ஈறுதிரிந்தது.*

***"காலொடு வந்த கமஞ்சூன் மாமழை"*** ***(குறுந்:158-3)***

*காற்றோடு வந்த, நிறைந்த நீரைக் கருவாகக் கொண்ட பெரிய மழையே! இத்தொடரில் கம என்னும் உரிச்சொல் நிறைவுப் பொருளில் வந்தது*

***"படர்சுமந் தெழுதரு பையுண் மாலை"*** ***(குறுந்:195-2)***

*துன்பத்தைச் சுமந்துவரும் மாலைக் காலம் துன்பத்தைத் தருகிறது.இத்தொடரில் பையுளென்னும் உரிச்சொல் நோயென்னும் குறிப்புணர்த்தியது*

***"ஐதே காமம் யானே"*** ***(குறுந்: 217-6)***

*நிச்சயமாக, காமநோய் நுட்பமானது. இத்தொடரில் ஐயென்னும் உரிச்சொல் வியப்பென்னும் குறிப்பில் வந்தது*

***"சேற்றுநிலை முனைஇய செங்கட் காரன்"*** ***(குறுந்: 261-3)***

*முனைவென்னும் உரிச்சொல் முனிவென்னும் குறிப்பை உணர்த்தியது சேற்றிண்கள் நிற்றலை வெறுத்த சிவந்த கண்ணையுடைய எருமை*

*ஐங்குறுநூற்றின் உரிச்சொற்களின் வருகை பின்வருமாறு*

***"நற்றோண் மருவாற் குலமரு வோரே"*** ***(ஐங்குறு: 464:4)***

*தலைவியிடம், தோழி உன் தோளை அணைப்பதற்குத் துடிப்பவர் ஆயிற்றே என்கிறார். இத்தொடரில் அலமரல் - உரிச்சொல் என்னும் சொல் சுழலுதல்(துடித்தல்) என்னும் குறிப்பை உணர்த்தியது.*

*புறநானூற்றின் உரிச்சொற்களின் வருகை பின்வருமாறு*

***தோல், துவைத்தம்பிற் றுளை தோன்றுவ"*** ***(புறம்: 4-5)***

*அம்பு தோலினைத் துளைத்த ஓசையால் துளை தோன்றுகிறது. துவையென்னும் உரிச்சொல் ஓசைப்பொருளில் வந்ததற்கு இவ்வடி மேற்கோள்.*

***"எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து"*** ***(புறம்: 24-9)***

*எல்லென்பது உரிச்சொனீர்மைத் தாயினும், ஆசிரியர் இடைச்சொல்லா ஓதினமையான் இடைச்சொல்லென்று கோடும்.*

***"நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்***
***செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென***
***அறம்பா டிற்றே யாயிழை கணவ"*** ***(புறம்: 34-5,7)***

"பாட்டு" என்னும் உரிச்சொல்

**"நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப"** **(புறம்: 36-10)**

எதிரிகள் காவற்காடுகளை வெட்டும் ஒலியானது நெடுமதில் சுழ்ந்த அரண்மனையிலே சேரனின் காதுகளில் ஒலிக்கிறது. இயம்பலென்னும் உரிச்சொல் இசைப்பொருளுணர்த்தற்கு மேற்கோள்.

**"சிலைத்தார் முரசங் கறங்க"** **(புறம்: 36-12)**

எதிரிகள் காவற்காடுகளை அழிக்க கோடாரி கொண்டு வெட்டும் ஒலியானது முரசம் கறங்க நீ போரிட்டனை என்கிறது. 'சிலை' என்னும் உரிச்சொல் ஒலித்தற்றொழிற் பண்பில் வந்ததற்கு மேற்கோள்.

**"வியன்றானை விறல்வேந்தே"** **(புறம்: 38-4)**

வியலென்னும் உரிச்சொல் வியனென்று திரிந்து நிற்றற்கு மேற்கோள்.

**"துன்னருந் துப்பின் வயமான் றோன்றல்"** **(புறம்: 44-10)**

இவையெல்லாம் கேட்டும் நாணங்கொள்ளதிருப்பது வலியினைத் தருகின்றது. வய என்னும் உரிச்சொல் 'வலி' என்னும் பொருளில் வந்தது.

**"வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"** **(புறம்: 53-12)**

மிக்க அறிவும், விளங்கிய புகழும் உடைய கபிலன் என்கிறது, புறநானூறு. இத்தொடரில் வெறுப்பென்னும் உரிச்சொல் செறிவென்னும் பொருளில் வந்ததற்கும், வெறுப்பு என்பது புறப்பொருட்கள் வந்ததற்கும் மேற்கோள்.

**"எங்கோ னிருந்த கம்பலை மூதும்"** **(புறம்: 54-1)**

கம்பலை என்னும் உரிச்சொல் அரவமாகிய இசைப் பொருண்மையுணர்த்தும்.

**"புனிறுதீர் குழவிக் கிலிற்று முலை போல"** **(புறம்: 68-8)**

"புனிறு' என்னும் உரிச்சொல் ஈன்றணிமையாகிய குறிப்புப் பொருளை உணர்த்தியதற்கு மேற்கோள்.

**"மைந்துடை மல்லன் மதவலி முறுக்கி"** **(புறம்: 80-2)**

வலியையுடைய மல்லனின் உடலை உடையவன். மதவலி: மதவென்பது வலியென்பதை விசேடித்த உரிச்சொல்

**"அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்"** **(புறம்: 99-1)**

பேணென்னும் உரிச்சொல் பெட்பின் பொருளில் வருதற்கு மேற்கோள்.

**"பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந"** **(புறம்: 126-8)**

ஒலி முழங்கும் அருவி உடைய முள்ளூர் மலைவேந்தன் 'இசை' என்னும் உரிச்சொல் ஒலித்தற் றொழிற்பண்பில் வந்ததற்கு மேற்கோள்.

**"தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்"** **(புறம்: 140-1)**

பலா மிகுந்த நாஞ்சில் நாட்டு மலை வேந்தன். தட என்னும் அகரவீற்று உரிச்சொல் தடவுநிலையென உகரம் பெற்று வந்ததற்கு மேற்கோள்.

**"நளிமலை நாட நள்ளியவ னெனவே"** **(புறம்: 150-28)**

மிக்க புகழும் பெருநாடும் உடைய தோட்டி மலை தலைவனே. "நள்" என்னும் உரிச்சொல் பெருமையை யுணர்த்தியதற்கு மேற்கோள்.

**"வள்ளியோர்ப் படர்குவர் புலவ ரதனால்"** **(புறம்: 154-5)**

"படர்" என்னும் உரிச்சொல் நினைத்தலும் செல்லுதலுமாகிய குறிப்பை யுணர்த்தும் என்பதற்கு மேற்கோள்.

**"முரசுகடிப் பகுப்பவும் வால்வளை துவைப்பவும்"** **(புறம்: 158 -1)**

சங்கும் முரசும் முழங்கவும். ''துவைத்தல்'' என்னும் உரிச்சொல் இசைப்பொருள் உணர்த்தியதற்கு மேற்கோள்.

**''பசந்த மேனியொடு படரட வருந்தி''** (புறம்: 159-6)

குழந்தை பிசைந்து பால் உண்ணும் முலை வாடிக் கிடக்கிறது. படரென்னு முரிச்சொல், உள்ளுதல், செல்லுதலென்னுங் குறிப்புக்களை உணர்த்துமென்பதற்கு மேற்கோள்.

**''உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த''** (புறம்: 160-1)

வீட்டில் உணவு இல்லாமையால் தன்மகன் இல்லத்தை மறந்துச் செல்கிறான். உருவென்னும் உரிச்சொல் உட்கென்னும் பொருளில் வருவதற்கு மேற்கோள்.

**''இயைந்த கேண்மை யில்லா கியரோ''** (புறம்: 190-5)

இயைபென்னும் உரிச்சொல் கூட்டமென்னும் குறிப்புணர்ந்துவதற்கு மேற்கோள்.

**''வாயா வண்கனிக் குலமரு வோரே''** (புறம்: 207-11)

உள்ளூற கனியாத வலிய பழம் போன்ற அவன்பால் பரிசில் வேண்டார் எம் போன்றவர். உலமரலும் அலமரல் போல்வதோர் உரிச்சொல்

**''நனிபே தையே நயனில் கூற்றம்''** (புறம்: 227-1)

உரிச்சொற்றொடருக்கும் உரிச்சொல் பெயரை யடுத்து வந்ததற்கும், நனியென்னு முரிச்சொல் மிகுதியென்னும் பண்பை விளக்கியதற்கும் மேற்கோள்.

**''ஈயாது வீயு முயிர்தவப் பலவே''** (புறம்: 235-20)

தவ - உரிச்சொல் - மிகுதி.

**''இனிநினைந் திரக்க மாகின்று திணிமணல்''** (புறம்: 243-1)

''இரங்கல்'' என்னும் உரிச்சொல் இரக்கமென்றாகி ஒரு பொருளது கழிவாற் பிறந்த வருத்தமாகிய குறிப்புணர்த்தி நிற்குமென்பதற்கு மேற்கோள்.

**''கயந்தலை மடப்பிடி புலம்ப''** (புறம்: 303-8)

பெண்யானைகள் அற்று வெட்கி வருந்தும் ஆண்யானைகளைக் கொன்ற வீரன். ''கய'' என்னும் உரிச்சொல் மென்மையை உணர்த்துவதற்கு இவ்வடி மேற்கோள்.

**''ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்''** (புறம்: 327-5)

வரகைத் தன் சுற்றத்தாரின் வறுமையைப் போக்கச் செலவிட்ட பின்னர் மிஞ்சிய வரகு என்கிறது. ''ஒற்கம்'' என்னும் உரிச்சொல் வறுமையாகிய குறிப்புணர்த்துவதற்கு மேற்கோள்.

**''கல்லே பரவி னல்லது**
**நெல்லு குத்துப் பரவுங் கடவுளு மிலன்''** (புறம். 335-11,12)

''பரவுதல்'' என்னும் உரிச்சொல் வருதலாகிய குறிப்புணர்த்தியதற்கு மேற்கோள்.

**''வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்''** (புறம் : 394-3)

தடவென்னும் உரிச்சொல் பெருமையை யுணர்த்து மென்பதற்கு இவ்வடி மேற்கோள்.

மேற்கண்ட தரவுகளின்படி, சங்க இலக்கியங்களுக்கு உரைகண்ட உ.வே.சாவின் உரைகளில் 43 உரிச்சொற்களின் வருகையினைக் காணமுடிகின்றன. குறுந்தொகையில் 14 இடங்களிலும் ஐங்குறுநூற்றில் 1 இடங்களிலும் புறநானூற்றில் 28 இடங்களிலும் ஆக 43 இடங்களில் உரிச்சொற்களை உ.வே.சா. தன்னுடைய உரைகளில் பதிவுச் செய்கிறார்.

சங்கப் புலவர்கள் தங்கள் புலமையினைத் தனித்துவமாகக் காட்ட பயன்படுத்திய ஒரு உத்தியாக உரிச்சொல்லினைக் காணமுடிகிறது. சங்கப் புலவர்கள் தங்கள் பாடல்களில் பயன்படுத்திய உரிச்சொற்களின் வருகை முறையினை நமக்கு உணர்த்துபவர்களாக உரைகாரர்கள் விளங்குகிறார்கள். உரையாசிரியர்கள் இல்லாவிடில் இவற்றையெல்லாம்

*நம்மால் அறிய இயலாது. உரிச்சொல் போன்ற குறிக்கத்தகுந்த இலக்கணக் கூறுகளை நமக்கு அறிமுகம் செய்கின்ற உரையாசிரியர்களின் உரைத்திறன்களை அறிதலும் பதிவு செய்தலும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் பெரிதும் துணைபுரியும். மற்ற மொழி இலக்கணக் கூறுகளுடன் ஒப்பிட்டு ஆய்வதும் இதன் அடுக்கட்ட வளர்ச்சிக்கு உதவும்.*

**துணைநூற் பட்டியல்**


1. *அரவிந்தன். மு. வை. உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், 2008.*
2. *உ.வே.சாமிநாதைய்யர் உரை, குறுந்தொகை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1983.*
3. *உ.வே.சாமிநாதைய்யர் உரை, ஐங்குறுநூறு, உ.வே.சா.நூல்நிலையம், 2007.*
4. *உ.வே.சாமிநாதைய்யர் உரை, புறநானூறு, உ.வே.சா.நூல்நிலையம், 1971.*
5. *சங்க இலக்கியம் எட்டுத்தொகை, தொகுதி 1, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், 2014.*
6. *சங்க இலக்கியம் எட்டுத்தொகை, தொகுதி 2, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், 2014.*
7. *சங்க இலக்கியம் எட்டுத்தொகை, தொகுதி 3, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், 2014.*
8. *சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, தொகுதி 1, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், 2014.*
9. *சங்க இலக்கியம்,பத்துப்பாட்டு, தொகுதி 2, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், 2014.*
10. *சுப்ரமணியம், ச. வே. சு. சங்க இலக்கியம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், 2006.*
11. *சிற்பி பாலசுப்பிரமணியன், நீல பத்மநாபன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி*
12. *தமிழண்ணல், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், தொகுதி 1, மணிவாசகர் திப்பகம், 2006.*
13. *தமிழண்ணல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், தொகுதி 2, மணிவாசகர் பதிப்பகம், 2006.*
14. *தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி 3, மணிவாசகர் பதிப்பகம், 2006.*


**References**


1. Aravinthan. *Editors*. Manivasagar Publications, 2008,
2. *U.V.Saminathaiyar's Commentary, Kurunthogai*, Annamalai University, 1983.
3. *U.V.Saminathaiyar's Commentary, Iynkurunooru*, U. V. Saminathaiyar Library, 2007.
4. *U.V.Saminathaiyar's Commentary, Purananooru*, U. V. Saminathaiyar Library, 1971.
5. *Sangam Literature Ettuthogai Vol I*, Chennai New Century Book House, 2014.
6. *Sangam Literature Ettuthogai Vol II*, Chennai New Century Book House, 2014.
7. *Sangam Literature Ettuthogai Vol III*, Chennai New Century Book House, 2014.
8. *Sangam Literature Patthupattu Vol I*, Chennai New Century Book House, 2014.
9. *Sangam Literature Patthupattu Vol II*, Chennai New Century Book House, 2014.
10. Subramaniam, S. V. S. *Sangam Literature*, Manivaasagar Publication, 2006.
11. Sirpi Balasubramaniyan & Neelapathmanaban, *Tamil Literary History from a New Perspective*. Sakthiya Academy
12. Tamillannal. *Tholkappiyam Ezhuthathikaaram Vol I*, Manivasagar Publications, 2006.
13. Tamillannal. *Tholkappiyam Cholathikaaram Vol II*, Manivasagar Publications, 2006.
14. Tamillannal. *Tholkappiyam Porullathikaaram Vol III*, Chennai, Manivasagar Publications, 2006.